**O.S.74/2024**

Date: **21.01.2026**

Pw–1 – பரமசிவன், த/பெ.சுப்பையா

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் தொடர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

9. வள்ளியம்மாள் சொத்து சம்பந்தமாக ஏற்கனவே அவ.எண்.207/2014 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அதில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்திருந்தேன் என்றால் சரிதான். இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்ட கட்டிடம் விக்கிரமசிங்கபுரம்–பாபநாசம் மெயின்ரோட்டிற்கு தென்பக்கமாக இருக்கிறது என்றால் சரிதான். விக்கிரமசிங்கபுரம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இயங்கி வந்த கட்டிடம் கதவு எண் என்ன என்றால் 144 ஆகும். மேற்படி சொத்திற்கு கீழ்பக்கம் எங்களுக்கு உண்டான வழிப்பாதை உள்ளது. அந்த வழிப்பாதைக்கு கிழக்கு பக்கம்தான் தாவா கடை 143 ஜி–யும், மற்றொரு கடை143 எப்–ம் இருந்து வருகிறது என்றால் சரிதான். கடை எண்.143 எப்–க்கு தான் தாவா இருந்து வருகிறது. 143 எப்– கடையை தான் நான் வாடகைக்கு கொடுத்ததாக சொல்கிறேன். 143 ஜி கடை யாரிடம் உள்ளது என்றால் வாடகைக்கு விட்டுள்ளேன்.

10. நான் முழுக்க முழுக்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதனால் தான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.207/2014 வழக்கில் சாட்சியம் அளிக்கும்போது என் தகப்பனார் சொத்துக்களை பொறுத்து பிரிவினை ஆகிவிட்டதா என்றால் பிரிவினை ஆகவில்லை என்றும், விக்கிரமசிங்கபுரம் மெயின்ரோட்டிற்கு தென்புறமாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கட்டிடமும் அதற்கு கீழ்புறமாக உள்ள சொத்துக்கள் என் அப்பா சுப்பையா பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றும், அந்த

சொத்து சம்பந்தமாக பிரிவினை ஆகிவிட்டதா என்றால் இல்லை, அது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்ததா என்றால் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் எனக்கு தனிப்பட்ட உரிமை கிடையாது என்றும், உயில் படி எனக்கு ஆயுள் பாத்தியம் தான் உண்டு என்றும், பிரதிவாதி தபசில் சொத்தின் உரிமையாளர்கள் என்றும், மோசடியாக உள்ள தீர்வை ரசீதுகளை வைத்துக்கொண்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், வழக்கு தபசில் சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் வாடகைதாரர்கள் கிடையாது என்றும், பிரதிவாதிகள் எனக்கு எந்தவித வாடகையும் கொடுக்கவேண்டியது அவசியம் கிடையாது என்று சொன்னால்சரியல்ல.

11. உயிலின் அடிப்பபடையில் பலன்களை அடைந்துகொண்டு உயிலை குறைகூற எனக்கு உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணை மற்றும் பிராதில் சொல்லியுள்ளதுபோல் யாதொரு பாகபிரிவினையும் கிடையாது என்றும், அதனால்தான் பாகப்பிரிவினை சம்பந்தமாக ஒவ்வொரு வழக்கிலும் ஒவ்வொரு விதமாக முரண்பாடாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றும், என் பிராது தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை

ஒம்/-பரமசிவன்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

P PRAVEEN JEEVA

Uploaded on 21.01.2026
Digitally signed by P PRAVEEN JEEVA
Date: 2026.01.21 14:27:37 +0530

மு.மா.உ.நீ
அம்பாசமுத்திரம்.